நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 சனவரி 25 வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2021இன் 03ஆம் இலக்கம்

## பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

பாசல் IIIஇன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

### அட்டவணை I

### பின்னிணைப்பு IV

### பகுதி III (அ) கொடுகடன் இடர்நேர்விற்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல்

| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | சொத்து | இடர்நேர்வு நிறை (%) |
|---|---|---|
| 20.3.1.1.1.2 | **மத்திய அரசாங்கத்தின் மீதான வெளிநாட்டுக் கோரல்**<br>இலங்கை அரசாங்கத்தின் மீதான அனைத்து வெளிநாட்டுக் கோரல்கள்<br>(திருத்தப்பட்ட இடர்நேர்வு நிறை 2021ஆம் ஆண்டிற்கு மாத்திரம் ஏற்புடைத்தாகும்) | 10 |
| 20.3.1.9.0.0 | **வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட கோரல்கள்**<br>தொகையானது, ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெற்ற வதிவிடச் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கோரல்களின் தொகையுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்குத் தகைமைபெறாத வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட கோரல்களுடனும் இணங்குதல் வேண்டும்)<br>(வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.3.1.9.1.0 இலிருந்து 20.3.1.9.2.0 வரை)<br>வர்த்தக ரீதியான உண்மைச் சொத்துக்கள் மீதான ஈடுகளின் மூலம் பிணையிடப்பட்ட இடர்நேர்விற்குள்ளாகும் தன்மை, இதிலிருந்து நீக்கப்படல் வேண்டும். | |
| 20.3.1.9.1.0 | **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெற்ற கோரல்கள்**<br>(அ) கீழேயுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, முதன்மை ஈடொன்றினால் முழுமையாகப் பிணையிடப்பட்ட வதிவிட வீடமைப்புக் கடன் அத்தகைய வதிவிடச் சொத்து கடன்பாட்டாளரினால் வதிதல் வேண்டும் அல்லது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>(ஆ) முன்னுரிமை இடர்நேர்வு நிறைக்குப் பயன்படுத்துவதற்கு இயலுமை பெறுவதற்கு கோரல்கள் பின்வரும் தகைமைப் பிரமாணத்தினைக் கட்டாயம் பூர்த்திசெய்தல் வேண்டும். | 35 |

| | | |
|---|---|---|
| | • பிந்திய மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சொத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியின் மீது குறைந்தபட்சம் 25 சதவீதம் கொண்ட இலாபம்.<br>• சொத்தின் மதிப்பீடு: வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஒதுக்கங்களின் வகைப்படுத்தல் மீதான பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிவாரி சுயாதீனமான மதிப்பீட்டாளரொருவரினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு அல்லது சொத்துக்களினது மதிப்பீட்டின் தற்போதைய உள்ளக மதிப்பீடு.<br>(இ) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு:<br>• அதே வங்கியுடனான ஈடாகவும்;<br>• கடனின் நோக்கம் வதிவிடத்திற்கான நோக்கங்களுக்குமாக இருக்குமிடத்து;<br>முதலாந்தர ஈடுகள் தவிர்ந்த ஈடுகள் அதே இடர்நேர்வு நிறைகளுக்கு தகைமைபெறும். | |
| 20.3.1.9.2.0 | **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெறாத கோரல்கள்**<br>மேலே தரப்பட்டுள்ள பிரமாணங்களைப் பூர்த்திசெய்யாது செயற்படுகின்ற கோரல்கள் | 100 |

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்